# மெட்ரோ ரயில் நிலையங்களில் இணைப்பு சேவை

## டிசம்பரில் 67,963 பேர் பயனாளிகள்

சென்னை, ஜன. 27: சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ, கார், சிருந்து (கேப்ஸ்) இணைப்பு சேவையை நிகழாண்டில் கடந்த ஆண்டு டிசம்பரில் மட்டும் 67,963 பேர் பயன்படுத்தியுள்ளனர்.

சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், முதல் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் முடிந்து, விமான நிலையம் - வண்ணாரப்பேட்டை வரையும், சென்ட்ரல் - பரங்கிமலை வரையும் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. மெட்ரோ ரயில் சேவையைப் பயன்படுத்தும் பயணிகளுக்கான போக்குவரத்து இணைப்பை மேலும் எளிமையாக்கும் வகையில், ஷேர் ஆட்டோ, கார்களை பயன்படுத்த ஷேர் டிரிப் முறை கடந்த ஆண்டு ஆகஸ்ட் 11-ஆம் தேதி அறிமுகப்படுத்தப்பட்டது.

கிண்டி, திருமங்கலம், ஆலந்தூர், சின்னமலை, ஈக்காட்டுதாங்கல், கோயம்பேடு, பரங்கிமலை ஆகிய 7 மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து ஷேர் ஆட்டோ சேவையும், அண்ணாநகர் கிழக்கு, கோயம்பேடு, ஆலந்தூர், வடபழனி, திருமங்கலம் ஆகிய 5 மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து கார் சேவையும் வழங்கப்படுகிறது.

இதுதவிர, போர்ட் மொபிலிட்டி தயாரித்த செயலி வழியாக சிருந்து இணைப்பு சேவை 16 மெட்ரோ ரயில் நிலையங்களில் செயல்படுத்தப்படுகின்றன. இந்த இணைப்பு சேவை ஒவ்வொரு ரயில் நிலையங்களில் இருந்து 6 கி.மீ. முதல் 8 கி.மீ. வரை செயல்படுத்தப்படுகிறது. இந்த வசதியை பயன்படுத்துவதற்கான ஒரே கட்டணம் ரூ.10.

இந்நிலையில், மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து ஷேர் ஆட்டோ, கார், சிருந்து சேவையை நிகழாண்டில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் 67,963 பேர் பயன்படுத்தியுள்ளனர். டிசம்பர் மாதத்தில் கார் சேவையை 4,578 பேரும், ஷேர் ஆட்டோ சேவையை 37,788 பேரும், சிருந்து இணைப்பு சேவையை 25,597 பேரும் பயன்படுத்தியுள்ளனர். கார், ஷேர் ஆட்டோ சேவையை கடந்த ஆண்டு ஆகஸ்ட் 11-ஆம் தேதி முதல் கடந்த ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதி வரை 7,18,003 பேரும் பயன்படுத்தியுள்ளனர்.

இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியது: ஷேர் ஆட்டோ, கார் சேவையை பயன்படுத்துவோர் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகிறது. இதுதவிர, மெகா கேப்ஸ் நிறுவனத்துடன் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் இணைந்து போர்ட் மொபிலிட்டி தயாரித்த செயலி வழியாக சிருந்து வாகன இணைப்புச் சேவையை தொடங்கியது. இந்த சேவை நந்தனம், அரசினர் தோட்டம், ஆயிரம் விளக்கு, எல்.ஐ.சி., ஆயிரம் விளக்கு, ஏஜி டி.எம்.எஸ்., கிண்டி உள்பட 16 மெட்ரோ ரயில்நிலையங்களில் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இந்த வசதி 32 மெட்ரோ ரயில் நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.